Registered as a Newspaper

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

கடர்: 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஆடு மார்கழி மீ 01 உ. செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1407 ரபியு ஆகிர் பிறை 13 (16-12-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 17

**G.A.Q.**

87ஆம் ஆண்டிற்கான
மீட்டல் வகுப்புக்கள்
88ஆம் ஆண்டிற்கான
2ஆம் பிரிவு
வகுப்புகள்
ஆரம்பமாகவுள்ளன.
விபரங்களுக்கு:
அதிபர்,
உயர் கலைக் கல்லூரி,
73, ஆனைப்பந்தியடி,
யாழ்ப்பாணம்.

**A/L 87**
**Day Classes**

பொருளியல் - குமாரவேல்
வர்த்தகம் - தேவர்
கணக்கியல் - மரியதாஸ்
அளவையியல் - வேல
இந்து நாகரிகம் - அருள்தங்கை
தமிழ் - மீரா

உயர் கலைக் கல்லூரி
73, ஆனைப்பந்தியடி,
யாழ்ப்பாணம்.

# வடக்குநோக்கிசிப்பாய்கள்நடைபவனி

## பொதுமக்களையும் பணயமாக பிடித்து அழைத்து வருகின்றனர்

யாழ்ப்பாணம், டிச 16

அனுராதபுரம், வவுனியா இராணுவ முகாம்களில் இருந்து ஆயிரத்துக்கும் அதிகமான சிப்பாய்கள் நேற்று வட பகுதியை நோக்கி வந்து கொண்டிருக்கின்றனர்

கொழும்பில் இருந்து வந்த சகல வாகனங்களும், பொதுமக்களும் சிப்பாய்களினால் பணயமாக வைக்கப்பட்டே இந்த நடைபவனி மேற்கொள்ளப்படுகிறது.

ஹெலிக்கொப்டர்கள், சீ-பிளேன் ஆகியன மேலே வட்டமிட்டுப் பாதுகாப்பு வழங்க நடைபவனி நடைபெற்று வருகிறது.

ஐம்பதுக்கும் மேற்பட்ட கவச வாகனங்களும், முகாம் அமைப்பதற்கான கூடாரங்கள் முள்ளுக்கம்பிகள் என்பனவும் சிப்பாய்களுடன் கூட எடுத்து வரப்படுவதாக அறியவருகிறது.

இந்த ரோந்து பவனியின்போது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதன் காரணமாக சில பொதுமக்கள் காயமடைந்ததுடன், கால்நடைகள் சில இறந்துள்ளன என்றும் தெரிய வருகிறது.

பயணிகள் பஸ்களிலும் சிப்பாய்கள் பிரயாணம் செய்வதுடன் பயணிகளையும் தம்முடன் இறக்கி நடத்தி வருகின்றன

(4 ஆம் பக்கம் பார்க்க)

# சொந்த யோசனையுடன் இந்தியக் குழு நாளை வரும்

## தமிழர் அபிலாஷைகளை பூர்த்தி செய்வதாக இருக்குமாம்

— கொழும்புச் செய்தியாளர் —

கொழும்பு, டிசம்பர் 16

இந்திய இணைஅமைச்சர் குழு, இனப்பிரச்சினைத் தீர்வுக்கான, தமது அரசின் சொந்த யோசனைகளுடன் நாளை புதன்கிழமை மாலை கொழும்பு வந்துசேரும். இந்தியாவின் யோசனைகள் தமிழரின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதாகவும் இலங்கையின் ஒற்றுமை, ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பேணுவதாகவும் இருக்கும் என்று இந்தியத் தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற் நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைச் சந்தித்த போது தெரிவித்தார்.

பெரும்பான்மை இனத்தின் அச்சத்தைப் போக்கும் அம்சங்களும் இந்திய யோசனைகளில் இருக்கும் என்று திரு. டிக்ஸிற், ஜனாதிபதி ஜெயவர்த்தனாவிடம் மேலும் தெரிவித்தார்.

டிக்ஸிற் — ஜெயவர்த்தன சந்திப்பு 40 நிமிடங்கள் நீடித்தது.

இணைஅமைச்சர்கள் தாங்கள் கொண்டுவரும் யோசனைகளை முன்வைத்தே ஜனாதிபதிஜெயவர்த்தன, மற்றும் அமைச்சர்களுடன் பேச்சுக்களை நடத்துவர் என்றும் திரு. டிக்ஸிற் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஜெயவர்த்தன, இலங்கை அரசின் யோசனைகள் அதுபற்றிய கலந்துரையாடல்கள் பற்றி திரு. டிக்ஸிற்றிடம் எடுத்துரைத்தார். இலங்கை அரசின் யோசனைகள், தமிழர் அமைப்புக்களின் நிலைப்பாடுகள் ஆகியவற்றை அடிப்படையாக வைத்தே இந்தியா தனது யோசனைகளைத் தயாரித்துள்ளது.

இந்திய இணைஅமைச்சர் குழுவுடன் வெளியுறவுச் செயலாளர் திரு. ஏ. பி. வெங்கடேஸ்வரனும் கொழும்பு வருகிறார். இது அவரின் முதலாவது இலங்கைப்பயணமாகும். தமிழர் அமைப்புக்களுடன் பேச்சு நடத்திவிட்டு இணை அமைச்சர்குழு புதுடில்லிசென்று பிரதமரைச் சந்தித்துவிட்டே கொழும்புவந்து சேரும். (அ—எ)



அரசாங்க விறகுக்கே உந்த உச்சவிலை என்டால், மற்ற இடங்களிலை விறகு வாங்கிறவை நிச்சயம் அதனை வாங்கின உடனேயே எரிஞ்சு போவினம்... பின்னை...!

## அந்த யோசனை இது தானா...?

புதுடில்லி, டிச. 15

இனப்பிரச்சினைத் தீர்வுக்கென இந்தியா தயாரித்துள்ள யோசனை விவரம் பின்வரும் அடிப்படையில் அமைந்திருப்பதாகவே உதயனுக்கு மிக நம்பிக்கையாக அறியவந்துள்ளது.

(1) வடக்கில் ஒரு தனித் தமிழ் மாகாணம்.

(2) (அ) இப்போதைய கிழக்கு மாகாணத்தில் இருந்து தமிழர் மாகாணம் ஒன்றை உருவாக்குதல்

(ஆ) முஸ்லிம், சிங்கள மாகாணங்களையும் அங்கு உருவாக்குதல்.

(இ) 1921 ஆம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டை அடிப்படையாக வைத்தே புதிய மாகாணங்களை உருவாக்க வேண்டும்.

(3) வடக்கின் தமிழ் மாகாணமும், கிழக்கின் தமிழ் மாகாணமும் தமிழ தார்யகம் என ஏற்றுக் கொள்ள வேண்டும். (அ)

## பேச்சுக்கும் தாக்குதலுக்கும் சம்பந்தமாம்!

அம்பாறை, டிச, 16

கல்முனை எம். பியும் முல்லைத்தீவு மாவட்ட அமைச்சருமான ஜனாப் மன்சூருக்கு எதிரான சுவரொட்டிகள் நேற்று கல்முனை நகரில் ஒட்டப்பட்டிருந்தன.

இச்சுவரொட்டிகள் பச்சை மையினால் எழுதப்பட்டிருந்தன.

நாடாளுமன்றத்தில் வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது ஜனாப் மன்சூர் நிகழ்த்திய பேச்சைக் கண்டிக்கும் வாசகங்களே இச்சுவரொட்டிகளில் எழுதப்பட்டிருந்தன.

உரிமைகளை வென்று எடுக்கவே போராளிகள் போராட்டம் நடத்துகிறார்கள் என்று ஜனாப் மன்சூர் நாடாளுமன்றத்தில் பேசியிருந்தார்.

இப்பேச்சின் பின்னர் தான் கல்முனைத் தாக்குதலைப் பொலீஸார் நடத்தினர் என்றும் சுவரொட்டிகளில் எழுதப்பட்டிருந்தன.

கல்முனை முஸ்லீம் பொதுமக்கள் இச்சுவரொட்டிகளை வெளியிட்டதாகவும் சுவரொட்டிகளில் குறிப்பிடப்பட்டு இருந்தது. (அ-எ-14)

## பலாலியில் இருந்து தாக்குதல்

காங்கேசன்துறை, டிச16

கடந்த ஞாயிறு குரும்பசிட்டி, கட்டுவன் பகுதிகளை நோக்கி பலாலி முகாமில் இருந்து தாக்குதல் நடத்தப்பட்டது.

எதிர்த் தாக்குதல் எதுவும் நடத்தப்படவில்லை.

## தமிழ் அமைப்புகளுடன் நேற்று இரண்டு சுற்றுப் பேச்சுகள்

சென்னை, டிச 15

இந்திய இணை அமைச்சர் குழு நேற்றுக்காலை தமிழர் விடுதலைக் கூட்டணியுடனும் தமிழப் போராளி அமைப்புக்களுடனும் பேச்சுக்களை நடத்தியது.

இணை அமைச்சர் குழுவில் திரு. ப சிதம்பரம், திரு. நட்வர்சிங் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

கடந்த ஞாயிறு மாலை இக்குழு புதுடில்லியில் இருந்து சென்னை வந்தடைந்தது.

அரசியல் சட்டநியுணர் திரு பாலகிருஷ்ணன் குழுவுடன் வந்திருந்தார்.

தமிழர் அமைப்புக்களுடன் பேச்சுக்களைத் தொடங்கும் முன்னர், இணை அமைச்சர்கள் முதலமைச்சர் எம். ஜி இராமச்சந்திரனுடன் பேச்சுக்களை நடத்தினார்கள்.

அதன் பின்னர் இணை அமைச்சர் குழு தமிழர் அமைப்புக்களுடனான பேச்சுக்களைத் தொடங்கியது.

முதலில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தூதுக்குழுவுடன் பேசியது. பின்னர் தமிழர் போராளி அமைப்புக்களுடன் பேச்சுக்களை ஆரம்பித்தது.

இப்பேச்சுக்களின்போது முதலமைச்சர் இராமச்சந்திரன், உணவு அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன், இந்திரா காங்கிரஸ் பொதுச் செயலாளர் கருப்பையா மூப்பனார், அரசியல் சட்ட நிபுணர் பாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பேச்சுக்கள் நேற்று மாலையிலும் நடந்ததாக அறிவிக்கப்பட்டது. (அ—எ)

## லலித் நாடு திரும்பினார்

கொழும்பு, டிச. 16

ஐந்து நாள் அமெரிக்க விஜயம் மேற்கொண்டிருந்த தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி நேற்றுக்காலை நாடு திரும்பினார்.

தனது அமெரிக்க விஜயம் பற்றி அமைச்சர் அறிக்கை ஒன்றை வெளி

(4-ம் பக்கம் பார்க்க)

# திருமலை இல்லாத தீர்வை ஏற்கவே முடியாது

## கூட்டணி வலியுறுத்து

சென்னை, டிச. 16

திருகோணமலை மாவட்டம் பாரம்பரிய தமிழர் பிரதேசம் அது இல்லாத எந்தத் தீர்வையும் நாம் ஏற்றுக்கொள்ள முடியாது.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தூதுக்குழு இந்திய இணை அமைச்சர் குழுவிடம் மேற்கண்டவாறு வலியுறுத்தியது.

சென்னையில் அரசுத் தலைமைச் செயலகத்தில் வைத்து திரு.அ. அமிர்தலிங்கம் தலைமையில் கூட்டணித் தூதுக்குழு இந்திய இணை அமைச்சர் குழுவைச் சந்தித்தது.

அப்பொழுதே இது பற்றி வலியுறுத்தப்பட்டது.

1924 ஆம் ஆண்டில் இருந்து 1981 வரையான கிழக்கு மாகாணத்தின் வரைபடங்களை தமிழர் விடுதலைக் கூட்டணித் தூதுக்குழு, இந்தியக் குழுவிடம் கையளித்தது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தூக்கு: 61 ரூபா 60 சதம்:

# விறகுக்கு ஆகாயவிலை! 50 சதவீதம் அதிகரிப்பு!!

யாழ்ப்பாணம், டிச 16

யாழ் குடாநாட்டில் விறகின் விலை இன்று தொடக்கம் சுமார் 50 சத வீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்தில் ஒரு தூக்கு விறகு இன்று தொடக்கம் 61 ரூபா 60 சதமாக விற்கப்படும்.

மரக் கூட்டுத்தாபனத்தில் இதுவரை ஒரு தூக்கு 41 ரூபா 25சதமாக விற்கப்பட்டு வந்தது.

விறகு ஏற்றி வரும் லொறிப் போக்கு வரத்

(4ஆம் பக்கம் பார்க்க)

## யாழ் பிராந்திய

# மக்கள்விடுதலைப்படை தலைவர் கபூர் மரணம்

யாழ்ப்பாணம், டிச. 16

ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கத்தின் தாக்குதல் பிரிவான மக்கள் விடுதலைப் படையின் யாழ்ப்பாண மாவட்டப் பொறுப்பாளர் 'கபூர்' மரணமடைந்து விட்டார் என அறியப்படுகிறது.

அப் பகுதியில் சில இடங்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்றுத் தேடுதல் நடத்தினர்.

அப்போது கபூர் கைது செய்யப்பட்டார் என்றும்; கைதான சிறிது நேரத்தில் தன்னைத் தானே சுட்டோ அல்லது நஞ்சருந்தியோ இறந்தார் என்றும் சொல்லப்படுகிறது. ஆனால் ஊர்ஜிதம் செய்யப்படவில்லை.

கைது செய்யப்பட்ட போது இரு தரப்பாருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் அவர் இறந்திருக்கலாம் எனவும் கூறப்பட்டது. அதுவும் ஊர்ஜிதப்படுத்தப்படவில்லை (அ-10)

மட்டுவிலில் வைத்தே அவர் இறந்தார் என்றும் சொல்லப்படுகிறது.

## நேற்றும் பலர் கைது தேடுதல் வேட்டை தொடர்கிறது

யாழ்ப்பாணம், டிச. 16

யாழ்ப்பாணப் பகுதியிலும் ஏனைய பகுதிகள் சிலவற்றிலும் நேற்றும் ஈ. பி. ஆர். எல். எவ். உறுப்பினர்கள் சிலர் சரணடைந்தும் புலிகளினால் கைது செய்யப்பட்டும் உள்ளனர்

இதுவரை சுமார் ஆயிரம் ஈ. பி. ஆர். எல். எவ் உறுப்பினர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டும் சரணடைந்தும் இருக்கலாம் என்று தெரியவருகிறது.

இவர்களில் ஒவ்வொரு பகுதிக்கும் பொறுப்பாளராக இருந்த பல தலைவர்களும் அடங்குவதாகத் தெரிகிறது

யாழ்நகரின் சகல பகுதிகளிலும் நேற்றும் புலிகள் ஒலிபெருக்கி மூலம் ஈ பி.ஆர்.எல். எவ் உறுப்பினர்களை சரணடையுமாறு அறிவித்துவந்தனர்.

நேற்று யாழ்நகரிலும், குடாநாட்டிலும் பொதுவாக அமைதி நிலவியது. அசம்பாவிதங்கள் பெரிய அளவில் நடந்ததாகத் தகவல் இல்லை.

(அ-இ-10)

## ரயிலை தவற விட்ட யாழ் பயணிகள்

யாழ்ப்பாணம், டிச. 16

சிப்பாய்களின் ரோந்துக் கெடுபிடிகள் காரணமாக சில பஸ் பயணிகள் நேற்று யாழ் ரயிலைத் தவறவிட்டனர்.

யாழ்தேவி இணைப்புச் சேவையை நடத்தும் பஸ்களில் மூன்று தனியார் பஸ்களை வவுனியா — மாங்குளம் வீதியில் ரோந்து சென்ற சிப்பாய்கள் மறித்து நீண்ட நேரம் சோதனையிட்டனர்.

மூன்று பஸ்களும் தாமதமாகவே வவுனியா சென்றன.

ரயிலைத் தவறவிட்ட பஸ் பயணிகள் உறவினர்கள் வீடுகளிலும், இறம்பைக்குளம் கத்தோலிக்க தேவாலயத்திலும்தங்கினர் (இ-10)

## வவுனியாவில் புலிகள் - ஈ. பி. ஆர். எல். எவ். மோதிக்கொண்டனர்!

வவுனியா, டிச. 16

வவுனியா மாவட்டத்தில் நேற்று தமிழீழ விடுதலைப் புலிகளும் — ஈ. பி. ஆர். எல். எவ் இயக்கத்தினரும் மோதிக் கொண்டனர்.

வவுனியா, பூவரசங்குளம், நெடுங்குளம் பகுதிகளிலேயே இம்மோதல்கள் இடம்பெற்றன.

சேத விவரங்கள் பற்றி செய்தி அச்சுக்குப் போகும்வரை தெரிவிக்கப்படவில்லை.

இம்மோதலை அறிந்த சிப்பாய்கள் வவுனியாவில் இருந்து இப்பகுதியை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாக பிந்திய செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-10)

## சுபநேரம்

16—12—1986

செவ்வாய்க்கிழமை

சுபநேரம்:

10.52 முதல் 12.22 வரை

ராகுகாலம்:

3.22 முதல் 4.52 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

திருவெம்பாவை ஒன்பதாம் நாள்

## கண்ணி வெடிகளை மீட்டெடுத்தனர்

யாழ்ப்பாணம், டிச, 16

வவுனியாவிலிருந்து மாங்குளம் நோக்கிவந்த சிப்பாய்கள் வழியில் சில கண்ணிவெடிகளை மீட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இயக்கங்களை ஒன்றுபட கோரிப் பெண்கள் நேற்று ஊர்வலம்

யாழ்ப்பாணம், டிச. 16

குருநகரில் நேற்றுப் பெண்களின் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடைபெற்றது.

"இயக்க மோதல்களை தவிர்த்து ஒன்றுபடுங்கள்" என்பதை வலியுறுத்தியே இந்த ஊர்வலம் நடைபெற்றது.

காலை 9 மணி அளவில் குருநகர் சேமக்காலைச் சந்தியில் இருந்து ஆரம்ப

(4-ஆம் பக்கம் பார்க்க)

**GLORIA TRAVELS**

● கனடா ● நோர்வே
● பிரான்ஸ் ● ஜேர்மனி

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தருவதுடன்

நோர்வே, கனடா செல்வதற்கு உடனடி பிரயாண ஒழுங்குகள் செய்து தரப்படும்.

மற்றும்

பாஸ்போட், பொண்ட் (BOND) விசா, ரிக்கற்

ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

GLORIA TRAVELS
சின்னத்தம்பி அவெனியூ,
மானிப்பாய்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏருவூர் பிரமுகர் கூறுகிறார்:

## கிழக்கில் வாழும் தமிழர், முஸ்லிம்களைப் பிரிக்க முடியாது

மட்டக்களப்பு, டிச 16

கிழக்கிலங்கை வாழ் தமிழ் - முஸ்லிம் இனங்கள் மதத்தால் வேறுபட்டாலும் மொழி, பாரம்பரியம், தொழில் ஆகியவற்றால் ஒன்றிணைந்தவர்கள். இந்நிலையில் அவ்விரு இனங்களும் ஒருபோதும் பிரியக் கூடாது.

மேற்கண்ட கருத்துக்களை முன்னாள் ஏருவூர் பட்டினசபைத் தலைவரான ஜனாப் எம். ஏ. சி. ஏ றஹ்மான் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்திலுள்ள சிரேஷ்ட முஸ்லிம் அரசியல்வாதிகளில் ஒருவரான இவர் மேலும் தெரிவிக்கையில்—

கிழக்கிலங்கை வாழ் தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கு தனித்தனி சபை உருவாகுமானால் சமீப காலங்களில் கட்டவிழ்த்து விடப்பட்ட தமிழ்—முஸ்லிம் கலவரங்கள் தொடர்ந்து நிலைகொண்டு இரு சமூகங்களுக்கும் அழிவைத் தேடித் தரும்.

கிழக்கில் எத்தனை மாகாணசபை வந்தாலும் தமிழ் முஸ்லிம் ஐக்கியம்கட்டிக்காக்கப்படல் வேண்டும். மொழி அடிப்படையில் அது இணைக்கப்படல் வேண்டும். உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்.

கிழக்கிலங்கை பிரிக்கப்பட வேண்டுமானால் மொழி அடிப்படையில் பிரியலாம். ஆனால் இன அடிப்படையில் பிரியக் கூடாது.

தமிழ் ஈழம் கோருவோர் நாட்டைப் பிளவுபடுத்த முனைவது போல் முஸ்லிம்மாகாண சபை கோருவோர் தமிழ்—முஸ்லிம் உறவை பிளவுபடுத்த முனைகிறார்கள்.

தனி மாகாண சபை கோருவோர் தனி இன அடிப்படையில் அரசியல் நடத்த நினைக்கிறார்கள்.

கிழக்கில் முஸ்லிம்கள் மாகாண சபைக்கு ஆதரவு தெரிவிக்கும் வெளி மாகாண முஸ்லிம்கள் எமது மாகாண நிலையை புரியாதவர்கள் என்றுதான் சொல்ல வேண்டும். இம் மாகாண சபை முஸ்லிம்களுக்கு எவ்வித நன்மையும் தர மாட்டாது.

கிழக்கு வாழ் தமிழ்—முஸ்லிம் ஒன்றிணைந்து வாழ்வதில்தான் இரு சமூகங்களின் எதிர்காலம் தங்கியுள்ளது என்றார். (உ-21)

வடபகுதியினரை ஒழிக்கச் செல்லும்

## காவியுடை நீக்கும் பிக்குவின் உடைகளே பார்சலில் வரும்

### விஜே கூறுகிறார்

யாழ்ப்பாணம், டிச. 16

வட பகுதியிலுள்ளவர்களை துப்பாக்கி ஏந்தி ஒழிப்பதற்காக காவி உடைகளைக் களைந்து காற்சட்டை அணியும் நிலைக்கு பௌத்த பிக்கு செல்வாராஞல் அவரது உடை மட்டும்தான் பார்சலில் வருமென்பதை அந்த பிக்கு உணர்ந்து கொள்ளவேண்டும்.

நாவலப்பிட்டி நகர சபை மைதானத்தில் நடைபெற்ற ஸ்ரீலங்கா மக்கள் கட்சி பிரசார கூட்டத்தில் உரையாற்றிய கட்சி அமைப்பாளர் திரு. விஜய குமாரணதுங்க இவ்வாறு குறிப்பிட்டார்.

யாழ் விஜயம் தொடர்பாகவே அவர் இக்கூட்டத்தில் முக்கியமாக விளக்கமளித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது:—

காவியுடை களைந்து ஆயுதம் ஏந்தி வடபகுதி செல்ல பௌத்த பீட அனுமதியைக் கோரியுள்ள பிக்குவின் பைத்தியக்காரத்தனம் குறித்து கவலைப்படுகின்றேன்.

அந்தப் பிக்கு காற்சட்டை அணியாமல் காவியுடையுடன் பிச்சைப் பாத்திரமேந்தி வட பகுதிக்குப் போய் அமைதியான முறையில் அன்பை உபதேசித்தால் ஒரு வேளை அப்போராளிகள் மனம் மாறலாம் என்பதை அந்தப் பிக்கு புரிந்து கொள்ளவேண்டும்.

வடபகுதி போராளிகள் மனிதாபிமானமிக்கவர்கள் என்பதை உலக நாடுகளும் புரிந்து விட்டன. அரசபடைகளுக்கு ஆயுதம் வழங்கும் நாடுகளின் ஆயுதங்கள் தான் போராளிகளும் பயன்படுத்துகிறார்கள் - இப்படி அவர் கூறினார் (உ-21)

## கைலாசபதி அரங்கில் நாடகக்கலை விரிவுரை கலைப்பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், டிச 16

நாடகக் கலைபற்றிய விரிவுரைகளும், கலைப் பயிற்சி வகுப்புகளும் யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

யாழ் செயலக உதவி அரசாங்க அதிபரும், யாழ் மாவட்ட கலாசார பேரவை செயலாளருமான திரு. எஸ். பி. பாலசிங்கம் உதயனுக்கு இத் தகவலைத் தெரிவித்தார்

அவர் கொடுத்தஏனைய தகவல்கள் வருமாறு:—

யாழ் மாவட்ட கலாசார பேரவை யாழ் பல்கலைக்கழக நுண்கலைத் துறையின் ஆதரவுடன் நாடகக் கலைபற்றிய விரிவுரைகளையும் கலைப்பயிற்சியையும், அளித்து நாடக அரங்குக் கலையை வளர்க்கவும் ஊக்குவிக்கவும் பத்திரிகை வாயிலாக விண்ணப்பங்கள் கோரியிருந்தது.

இதற்கு நாடகக்கலை போதிக்கும் ஆசிரியர்கள், பயிலும் மாணவர்கள் நாடக ஆர்வலர்களாக 250க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன. விண்ணப்பதாரிகளின் வயதுவீச்சு 12—76 வயதுவரை இருந்தது என்பது குறிப்பிடத்தக்க மகிழ்ச்சியான அம்சமாகும்.

பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், கலாநிதிகள், பேரவை உறுப்பினர்களைக் கொண்ட குழுவினர் விண்ணப்பதாரிகளுடன் கலந்துரையாடி அவர்களின் தகைமை ஆர்வம் ஆகியவற்றை மதிப்பீடு செய்து 88 பேரைப் பயிற்சிக்குத் தெரிவுசெய்துள்ளது

இவர்களுள் அரங்குக் கலையைப் பாடசாலையில் பயிற்றும் 15 ஆசிரியர்களும், இக் கலையைக் க. பொ. த உயர்தர வகுப்பில் பாடமாகப் பயிலும் 21மாணவர்களும் நாடக ஆர்வலர்கள் 52 பேரும் அடங்குவர் - இவ்வாறு திரு. பாலசிங்கம் தொடர்ந்து கூறினார். (உ-9)

## மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

## கிராமிய நீதிமன்றங்கள் ஏன்?

### கிட்டு விளக்கம்

கரவெட்டி, டிச. 16

சமாதான சபைகளும், விழிப்புக்குழுக்களும் சரியான முறையில் இயங்காததாலேயே தமிழீழ கிராமிய நீதி மன்றங்கள் உருவாக்கப்பட்டன.

நெல்லியடி லக்ஷ்மி, தியேட்டரில்நடைபெற்ற வடமராட்சி அனைத்து கிராமிய நீதிமன்றங்களின் அங்கத்தவர்களுக்கான கருத்தரங்கில் பேசுகையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் வட பிராந்தியத்தளபதி கிட்டு மேற்கண்டவாறு கூறினார்.

திரு. கிட்டு தொடர்ந்தும் பேசுகையில் அண்மைக்காலங்களில் மக்களினால் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக மக்களால் உருவாக்கப்பட்ட சமாதான சபைகள், விழிப்புக் குழுக்கள் இடத்திற்கிடம் வெவ்வேறு வகையான தீர்ப்புகளை வழங்கி வந்தன. இந்தஸ் தாபனங்கள் மக்கள் மத்தியில் ஏற்புடையவையாக அமையவில்லை.

இதனால் மக்கள் எம்மிடம் முறையீடு செய்தனர்.

எனவேதான் மக்களின் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்ப்பை வழங்கும் முகமாக அண்மைக்காலத்தில் கிராமிய நீதி மன்றங்களை உருவாக்கியுள்ளோம்.

யாழ் குடாநாட்டில் இராணுவத் தாக்குதல் மேற்கொள்ளப்பட இருப்பதால் சகல மக்களும் தற்பாதுகாப்புத் திட்டத்தைப் பயின்றிருக்க வேண்டும்.

இப்படித் தளபதி கிட்டு கூறினார்.

கருத்தரங்கில் வடமராட்சி பகுதியில் உள்ள அனைத்து கிராமிய நீதி மன்ற உறுப்பினர்கள் சுமார் 300 பேர் கலந்து கொண்டனர். (இ-70)

## இடம் மாற்றம்

யாழ்ப்பாணம், டிச. 16

தேசிய கூட்டுறவுச் சபையின் யாழ் மாவட்ட அலுவலகம் நாட்டிலுள்ள இப்போதைய சூழ்நிலை காரணமாக; யாழ் கடற்கரை வீதியிலுள்ள கூட்டுறவுப் பயிற்சி நிலையக் கட்டடத்திற்கு தற்காலிகமாக இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. (இ-5)

இலங்கையருக்கு

## வெளிநாட்டில் வேலை ரூ. 70 கோடி வருமானம்

கொழும்பு, டிச. 16

வெளிநாட்டு வேலை வாய்ப்பினால் இலங்கைக்கு 70 கோடி ரூபா வருமானமாகக் கிடைக்கின்றது.

தேயிலை வருமானத்திற்கு அடுத்ததாக வெளிநாட்டு வேலைவாய்ப்பே வருமானத்தைத் தருவதாக தொழில் அமைச்சின் வேலைவாய்ப்புப் பிரிவுத்தலைவர் டேவிட் சொய்சா தெரிவித்தார்.

தேயிலையால் இலங்கைக்கு 120 கோடி வருமானமாகக் கிடைக்கின்றது.

இப்போது சுமார் 3 லட்சம் பேர் மத்திய கிழக்கு நாடுகளில் வேலை பார்த்து வருகின்றனர். (உ-எ)

## மறுபரிசீலனை செய்ய 16 ஆயிரம் பேர் விண்ணப்பம்

ஜீ. சீ. ஈ. பரீட்சை முடிவுகளை

யாழ்ப்பாணம், டிச 16

அண்மையில் வெளியாகிய க. பொ. த ப. உயர்தர பரீட்சை முடிவுகளை மறுபரிசிலனை செய்யுமாறு 16,000 பரீட்சார்த்திகள் விண்ணப்பங்களை அனுப்பி வைத்துள்ளார்கள்.

விண்ணப்பங்களின் பிரகாரம் முடிவுகள் மறுபரிசீலனை செய்யும் அலுவல்கள் துரிதமாக நடைபெற்றுவருகின்றன.

முடிவுகள் இம்மாத இறுதியில் அனுப்பிவைக்கப்படும்.

பல்கலைக்கழகங்களுக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ள மாணவ விவரங்கள் இதன் பின்பு தான் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது. (உ-21)

## பாலம் அமைக்கப்பட்டது

கரவேட்டி டிச. 16

கட்டைவேலிப் பகுதிக்குட்பட்ட பிட்டிருச்சுடலைக்குச் செல்லும் பாலம் ஐம்பதாயிரம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாகபொது மக்கள் இவ்வழியால் பெரும் சிரமத்தின் மத்தியில் சுடுகாட்டிற்குச் சென்றுவருகின்றனர்.

இதனை நிவர்த்தி செய்யும் வகையில் துன்னாலை தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் இப்பாலத்தின் திருத்தவேலைகளைப் பொறுப்பேற்று பூர்த்தியாக்கியிருக்கிறது. (உ-70)

## மட்டு. விமான நிலைய காணி சுவீகரிப்புக்கு விரைவில் நஷ்டஈடு

மட்டக்களப்பு, டிச. 16

மட்டக்களப்பு விமான நிலைய சுற்றுக்காணி சுவீகரிப்பினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்துள்ள குடியிருப்பாளர்களுக்குரிய நஷ்ட ஈடு, நிவாரணம் கூடிய விரைவில் வழங்கப் படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்தகவலை பதில் அரச அதிபர் திரு. பூ. சங்காரவேல் மாவட்ட தொழிற் சங்க சம்மேளனப் பிரதிநிதிகள் தம்மைச் சந்தித்து உரையாடிய போது தெரிவித்தார்.

மேற்படி குடியிருப்பாளர் இடம் பெயர்ந்து ஒரு வருடமாகியும்நஷ்ட ஈடு, நிவாரணம் எதுவும் இதுவரைவழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-21)

யாழ் ஆசிரியர்களுக்கு ஜனவரியில்

## புதிய சம்பளத்திட்ட கொடுப்பனவுகள்

பலாலி, டிச 16

கடந்த ஜனவரி மாதம் முதல் அமுல் படுத்தத் தக்கவாறு ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட புதிய சம்பளத் திட்டத்தினை யாழ் கல்வித்திணைக்களம் 1987 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் வழங்கவுள்ளது.

1986 ஆம் ஆண்டு ஜனவரிமுதல்தற்போதுவரையுள்ள காலத்துக்குரிய நிலுவைகள் அனைத்தையும்1987 ஜனவரி மாதத்தில் வழங்க வேண்டுமென யாழ் கல்விப் பணிப்பாளர் திரு ஆர். சுந்தரலிங்கம் நிதிப்பகுதியிடம் பணித்துள்ளார்.

இப்புதிய சம்பளத்திட்டத்தினைவவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்ட கல்வித்திணைக்களங்கள் அவ்வப்பகுதி ஆசிரியர்களுக்கு ஏற்கனவே வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-116)

## மக்கள் முகம்

### கருகம்பனை இந்து இளைஞர் விளையாட்டு கழகம்

யாழ்ப்பாணம், டிச 16

கருகம்பனை இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் புனரமைக்கப்பட்டது,

புதிய நிர்வாகிகள் விவரம் வருமாறு:

தலைவர்: செ. சிவகுமார், உபதலைவர்: து. பத்மரஞ்சன், செயலாளர், சி. நிர்மலன், உபசெயலாளர்: தி. உதயசங்கர், பொருளாளர்: த. விஷ்ணுகாந்தன், செயற்குழு: சண்முகவசீகரன், சி. நகுலாசபதி, க. ஈஸ்வரநாதன், சிவவரதன், (இ-எ)

## பருத்தித்துறையில் 15 பாடசாலைகள் தர முயர்வு

பருத்தித்துறை, டிச. 16

வடமராட்சி கிழக்கிலுள்ள 15 பாடசாலைகள் அடுத்த வருடம் முதல் தரமுயர்த்தப்படவுள்ளன.

பருத்தித்துறை கல்வி வட்டாரத்திலுள்ள 15 பாடசாலைகள் தை மாதம் முதல் ஆண்டு 7 வகுப்புகளை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதென பருத்தித்துறை வட்டாரக்கல்வி அதிகாரி திரு ப. சச்சிதானந்தம் தெரிவித்தார். (உ-118)

## அன்பளிப்பு

கரவேட்டி டிச. 16

சாவகச்சேரி லயன்ஸ் கழகம் பளை அரசினர் வைத்தியசாலைக்கு வைத்திய உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

நோயாளர்களைஏற்றிச் செல்லும் ஸ்ரெச்சர், மருந்து எடுத்துச் செல்லும் ஸ்டாண்ட் என்பனவற்றைசாவகச்சேரி லயன்ஸ் கழக தலைவர் டாக்டர் பி. பிலிப்ஸ் பளை வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் திருமதி ஏ. குமாரதேவனிடம் கையளித்தார். (உ-70)

சேவை

மணமகன் - மணமகள் தேவைகளுக்கும் எப்பொருள்களானாலும் ஆதனங்களுட்பட வாங்கவும் - விற்கவும் - திட்டப் பரிசு விபரங்களுக்கும் எம்மை நாடுங்கள். லக்கி பெனிபிட்கோ லிமிட்டட், சந்திக்கு அருகாமையில் கோப்பாய்.

## முல்லைத்தீவுப் பகுதியில் நாற்றுகள், விதைகள் விநியோகம்

பருத்தித்துறை, டிச.16

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள சகல கமநல சேவை நிலையங்களிலும் கமநல சேவை உதவி ஆணையாளர் திணைக்களத்திலும் அண்மையில் விவசாய ஆராய்ச்சி நிலையத்தினால் கண்டுபிடிக்கப்பட்ட புதிய மிளகாய் நாற்றுக்களும், வீட்டுத் தோட்ட மரக்கறி விதைகளும் விற்பனை செய்யப்படுகின்றன.

விவசாயிகள் தங்களுக்குத் தேவையான மரக்கறி விதைகளை மொத்தமாகப் பெற்றுக் கொள்ள அண்மையில் இருக்கும் கமநல சேவை நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு முல்லைத்தீவு மாவட்ட கமநல சேவை உதவி ஆணையாளர் திரு. வை. எஸ். இராஜரட்ணம் தெரிவித்துள்ளார். (உ-118)

## இளவாலையில் டிஸ்பென்சரி

பண்டத்தரிப்பு, டிச. 16

இளவாலையில் டிஸ்பென்சரி கட்ட 3 லட்சம் ரூபா ஒதுக்கப்படவுள்ளது.

விளான், இளவாலை பத்தாவத்தை மாரீசன் கூடல், சித்திர மேழிமுள்ளானை மக்கள் பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலைகளுக்கு வரும் சிரமத்தை நீக்குவதே இதன் நோக்கம் ஆகும்.

சுகாதார அமைச்சு, யாழ் அபிவிருத்திச்சபை ஆகியவற்றை இளவாலை பொருளாதார கலை கலாசார வளர்ச்சிச் சபை இது தொடர்பாக வலியுறுத்தி வந்தது குறிப்பிடத்தக்கது. (இ-120)

## தோட்டத் தொழிலாளர் மலையகத்திலேயே தொடர்ந்து வாழ வேண்டும்

### ஈரோஸ் பிரதிநிதி கூறுகிறார்

ஊர்காவற்றுறை, டிச. 16

இலங்கையின் மத்திய மலை நாடானது மலையக தோட்டத் தொழிலாளருக்கு உரிய பிரதேசமாகும். அப் பிரதேசம் அவர்களால் ஆக்கப்பட்டது அவர்களாலேயே செழிப்பான பூமியாக்கப்பட்டது பல ஆண்டு காலமாக அவர்கள் மலையகத்திலேயே வாழ்ந்து வருகின்றார்கள். ஆகவே அவர்களை இந்தியாவுக்கு அனுப்பிவைப்பதோ அல்லது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வந்து குடியேறச் சொல்லுவதோ தப்பானது ஆகும்.

இவ்வாறு கூறினார் ஈரோஸ் பிரதிநிதி சின்ன பாலா.

அரசியல் தத்துவார்த்த ஏடான 'பொதுமை' மாதாந்த பத்திரிகையின் விமர்சனக்கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

காவலூர் இலக்கிய வட்ட ஆதரவில் இடம் பெற்ற இந்த விமர்சன அரங்கில் ஈரோஸ் பிரதிநிதி தொடர்ந்து உரையாற்றுகையில் எமது ஸ்தாபனத்தின் வரையறுக்கப்பட்ட எல்லைப் பிரதேசத்தின் உள்ளே மலையகமும் அடங்குகின்றது.

இதை சிலர் கற்பனாவாதம் என்கின்றார்கள். ஆனால் எமது விடுதலை ஸ்தாபனம் மேற்கொண்ட தீவிர ஆய்வுகளின் பலனாகவே இம் முடிவு எடுக்கப்பட்டது.

மலையகமக்கள் எமது இனத்தின் முதல்தரமான பாட்டாளி மக்களாவர்.

எமது விடுதலைப் போராட்டமானது ஒரு வர்க்க விடுதலையோடு ஒட்டியதான விடுதலையாக இருக்க வேண்டும்.

இப்படி அவர் கூறினார். (இ-16)

## ஜீ.சீ.ஈ. பரீட்சை முறை 1988 முதல் மாற்றம்

கொழும்பு, டிச. 16

1988ஆம் ஆண்டு தொடக்கம் ஜீ. சீ. ஈ. சாதாரணதர பரீட்சையில் கல்வி அமைச்சு மாற்றங்களைக் கொண்டு வர முடிவு செய்துள்ளது.

1988 முதல் இப் பரீட்சை பிரதேச, தேசிய மட்டத்தால் நடை[illegible] தாய்மொழி, ஆங்கிலம், சமயம், [illegible]க் கல்வி, கணிதம் என்பன தேசிய மட்டத்தால் பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்படும்.

ஏனைய பாடங்கள் பிரதேச கல்விப் பணிப்பாளர்கள் மூலம் நடத்தப்படும்.

சமய பாடத்திற்கு முக்கியத்துவம் வழங்கப் பட இருப்பதால் இப் பாடமும் தேசிய மட்[illegible] குறித்து அமைச்சு ஆராய்ந்து வருகிறது. (உ-21)

## சட்டவிரோத மின்பாவனைக்கு தண்டனை

### தலா 100 ரூபா அபராதம்

ஊர்காவற்துறை, டிச. 16

தீவுப்பகுதியில்சரவணை, வேலணை ஆகிய இடங்களில்சட்டவிரோத மாக மின்சாரம் பெற்றசுமார் இருபது பேருக்கு சுருவில் கிராமிய நீதி மன்றம் தலா நூறு ரூபா அபராதம் விதித்தது.

மேற்படி கிராமிய நீதி மன்றத்தின் ஆரம்ப அமர்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை புளியங்கூடலில் இடம் பெற்றது.

அப்போது மேற்படி சட்ட விரோதமாக மின்சாரம் பெற்றவர்கள் விசாரிக்கப்பட்டனர்.

அவர்கள் அனைவரும் தங்கள் குற்றங்களை ஒப்புக் கொண்டனர். இதனால் அபராதத் தொகையை செலுத்தும் படி கேட்கப்பட்டனர். (உ-16)

## வட்டக்கச்சி, உருத்திரபுரம் ஆஸ்பத்திரிகளுக்கு மின்சாரம்

கிளிநொச்சி, டிச 16

1986 ஆம் ஆண்டு பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவு நிதியிலிருந்து வட்டக்கச்சி, உருத்திரபுரம் அரசினர் வைத்தியசாலைகளுக்கு மின்சாரம் வழங்கும் வேலைகள் தற்போது ஆரம்பமாகியுள்ளன.

இதேபோன்று 86 ஆம் ஆண்டு இரத்தினபுரம் கிராம மின் இணைப்பு வேலைக்கென ஒதுக்கப்பட்ட சுமார் ஒரு இலட்சத்து ஐயாயிரம் ரூபாவுக்குரிய வேலைகள் கடந்த வாரம் நடைபெற்று முடிந்தன.

இதனைவிட 86 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட திருவையாறு இரண்டாம் பகுதி ஓவசியர் சந்தி, கனகபுரம், கோணாவில், ஸ்கந்தபுரம் ஆகிய இடங்களுக்குரிய வேலைகளைக் காலதாமதமின்றி உடன் ஆரம்பிக்குமாறு கோரி வடபிராந்திய மின்முகாமையாளர்அனுராதபுரம் மின் பொறியிலாளர் (மாங்குளம்) கிளிநொச்சி அரசாங்க அதிபர் ஆகியோருக்கு கிளிநொச்சி கிராம அபிவிருத்தி ஒன்றியம் கடிதம் அனுப்பி வைத்துள்ளது. (இ-76)

## அலுவலகங்கள் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், டிச, 16

யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபையின் உப அலுவலகங்களுக்கு புதிய கட்டடங்களை அமைப்பதற்கு அபிவிருத்திச்சபை நிதி ஒதுக்கியுள்ளது.

கோப்பாய் உரும்பராயிலுள்ள உப அலுவலகங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்ட ஒவ்வொன்றுக்கும் தலா இரண்டு லட்சத்து முப்பதாயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என அபிவிருத்திச் சபைக் கணக்காளர் திரு க.ம, ராஜேந்திரன் தெரிவித்தார். (உ-5)

உயிர் காக்கும் சஞ்சீவி

இன்றைய இக்கட்டான காலகட்டத்தில் உங்கள் உடன் பிறப்புக்களின் உயிர்கள் விலைமதிக்க முடியாத திரும்பப் பெற இயலாத மாபெரும், சொத்துக்கள்.

மரணத்துடன் போராடுபவரை நீங்களும் காப்பாற்றலாம்

உயிர் காப்பது உன்னத பணி

யாழ். ஆஸ்பத்திரி இரத்த வங்கி

உங்கள் வரவை எதிர்பார்த்து நிற்கிறது!

இரத்த தானம் செய்யுங்கள்! விரைந்து செய்வீர்!! தொடர்ந்து செய்வீர்!!!

தானத்தில் சிறந்தது இரத்ததானம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

மனமே முக்கியம் மனம் ஒரு நிலைப்படும் போதுதான் ஒருவன் எல்லாச் சித்திகளையும் பெறுகிறான்.

— அன்னை சாரதா தேவி.

உதயன்
உண்மை - அறச்சாலை - ஒருமை
இல.15 2ஆவது ஒழுங்கை தொலைபேசி: 24808
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம். 16-12-1986 த.பெ இல. 85

# மறியற் போரும் "கெற்போரும்"!

மக்கள் வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்பதற்காக மீண்டும் மறியல் போராட்டம் நடத்தப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின், இனப்பிரச்சினை போல அடகு நகை மீட்பும் நீண்ட கால இழுபறிப் பிரச்சினையாகிவிட்டது. போராட்டம் நடத்தியே நகைகளை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது; இன்னமும் ஏற்பட்டு வருகிறது.

வங்கியில் அடகு வைக்கப்பட்ட நகைகளைத் திருப்பித் தரக் கோரி ஏற்கனவே நடத்தப்பட்ட அமைதிப் போராட்டங்களினால் கணிசமான மக்கள் பயன் அடைந்தனர் என்பது உண்மை. அவர்களின் நகைகள் நீண்ட காலத்தின் பின்னர் பெரும் கஷ்டங்கள், சிரமங்கள் மத்தியில் கைக்கு வந்து சேர்ந்தன.

மக்களின் உடைமையைத் தான் வைத்துக் கொண்டு அதனைத் திரும்பக் கொடுப்பதற்கு மக்கள் வங்கி பெரும் 'கெற்போர்' தனம் காட்டி வருகிறது.

அடகு நகைகளைத் திரும்பப் பெறுவதற்கு ஒரு முறை கொழும்பு வருமாறு நிபந்தனை விதிக்கும். அடுத்த முறை இராணுவ முகாமில் வைத்துக் கொடுக்கப் போவதாகச் சொல்லும். அதாவது உயிராபத்தின் மத்தியில் நகைகளை வந்து எடுத்துச் செல்லுமாறு மக்களை நிர்ப்பந்திக்கும்.

இவ்வாறாக வசிகி காலத்தைக் கடத்தி வந்ததே அன்றி அடகு வைத்த சகலரின் நகைகளையும் திரும்பக் கொடுக்கவில்லை.

அடகு நகைகளை உரியவர்களிடம் கொடுத்து அவர்கள் கஷ்டத்தைப் போக்க வேண்டும் என்ற ஆர்வமும், அக்கறையும் வங்கி நிர்வாகத்திற்கு இருந்திருக்குமானால் இவ்விஷயம் இத்தனை காலத்திற்கு இழுத்தடிக்கப்பட்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை.

மக்கள் வங்கியின் மேல் உள்ள நம்பிக்கையின் பேரில்தான், மக்கள் தங்கள் விலை மதிப்புள்ள தங்க நகைகளைக் கொடுத்து அவற்றின் பெறுமதிக்குக் குறைந்த பணத்தைப் பெற்றார்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் தாம் பெற்ற பணத்தைக் கொடுத்து நகைகளை மீளப் பெறலாம் என்ற உத்தரவாதம் உண்டு என்ற மனநம்பிக்கையுடனேயே அடகு வைத்தார்கள்.

ஆனால் அந்த நம்பிக்கையை மோசடி செய்ததற்கு ஒப்பாக வங்கி நிர்வாகம் அடகு நகைகளை திரும்பக் கொடுப்பதில் போதிய அக்கறை காட்டாமல் மக்களை அலைக்கழித்து அவலப்படுத்துகிறது.

ஏதேதோ காரணங்களைக் கூறி சிறிய இடைவெளிக்குள் செய்து முடிக்கக் கூடிய காரியத்தை இழுத்தடித்து வருகிறது.

இதனால் மீண்டும் வங்கிசன் முன்னால் மறியற் போர் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் அடகு வைத்தோருக்கு ஏற்பட்டுள்ளது. அந்த மறியற் போரினால் வங்கியின் வழமையான வாடிக்கையாளர்கள் பாதிக்கப்படுவர். வங்கியின் இயக்கமும் குன்றிவிடும்.

வருடாந்தக் கணக்கு விவரங்களை முடித்து, பதிவுகளை சரிபார்த்து, நேர் சீராக்கி அடுத்த வருடத்திற்குரிய அலுவல்கள் சரியாக நடப்பதற்கு ஏற்பாடு செய்வது டிசம்பர் மாதத்திலேயே ஆகும்.

இப்போது மறியல் போர் நடத்தினால் வங்கியின் அடுத்த வருடச் செயற்பாடுகள் முற்றாகத் தடைப்படலாம். அதனால் வாடிக்கையாளருக்குக் கஷ்டமும், வங்கிக்குப் பெரு நஷ்டமும் உண்டாகும்.

இதனை மனதிற் கொண்டாவது அடகு நகைகளைத் திரும்பக் கொடுக்கும் விடயத்தில் அதிக அக்கறை காட்டி குறுகிய காலத்திற்குள் நகைகளைத் திரும்பக் கொடுக்க வங்கி நிர்வாகம் வசதி செய்ய வேண்டும்.

சந்தர்ப்பத்திற்கு ஏற்றாற் போல வாக்குறுதிகளைக் கொடுத்து மக்களை ஏமாற்றி, காரியத்தை இழுத்தடிக்கும் மனோபாவத்தை நிறுத்த வேண்டும். எவ்வளவு துரிதமாக அடகு நகைகள் மீளக் கொடுக்கப்படுகின்றனவோ அவ்வளவு கெதியில் வங்கி சுமுகமாகத் தனது வழமையான அலுவல்களை நடத்த முடியும்.

நகைகள் எந்தெந்தக் கிளைகளில் அடகு வைக்கப்பட்டனவோ ஆங்காங்கேயே அவற்றைத் திரும்பக் கொடுக்க வசதி செய்வது அவசியம். அதனை விரைவில் செய்வது மிக அவசியம்.

மறியற் போரைத் தவிர்ப்பதற்கு வங்கி நிர்வாகம் உடன் செயலில் இறங்க வேண்டும்.

இதில் போராளிகளின் உதவியும் அவசியமாகிறது. அடகு நகைகளை கிளைகளுக்கு எடுத்துவருவதற்கும் அங்கு வைத்துத் திரும்பக் கொடுப்பதற்கும் கொள்ளைகள் தடுக்கப்பட வேண்டும். அதற்கான உத்தரவாதத்தை போராளிகள் வழங்குவார்களேயானால், அடகு நகைகளை உரியவர்களுக்கு விரைவில் வழங்குவதற்கு வங்கிக்குப் பேருதவி புரிந்ததாக முடியும். செய்வார்களா?

# தமிழ் பட்டதாரிகள் 114 பேருக்கு ஆசிரியநியமனம்

கொழும்பு, டிச. 16

கல்விச்சேவை ஆணைக் குழுவினால் 114 தமிழ்பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது, இவர்களில் 12 பேர் முஸ்லிம்கள். ஏனையோர் தமிழர்.

வவுனியா-6, முல்லைத்தீவு-2, மன்னார்-6, திருமலை-2, மட்டக்களப்பு-24

(4ஆம் பக்கம் பார்க்க)

# பாகிஸ்தானில் இனக்கலவரம்

## 84பேர் பலி! 310 பேர் காயம்!!

## 350 கட்டடங்கள் தீக்கிரை

### ஊரடங்கு உத்தரவு

கராச்சி, டிச.15

பாகிஸ்தானின் இரண்டாவது பெரிய பட்டினமான கராச்சியின் வரலாற்றில் என்றுமில்லாதவாறு மிகமோசமான இனக்கலவரங்கள் ஏற்பட்டுள்ளன.

இதனால் 84பேர் கொல்லப்பட்டனர். 310 பேர் படுகாயமடைந்தனர்.

350 கடைகளும் வீடுகளும் தீக்கிரையாகின நான்கு மாவட்டங்களில் காலவரையறையற்றஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

காயங்களுக்குச் சிகிச்சைக்காக மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டவர்களில் பலருக்குதுப்பாக்கித் தோட்டாக் காயங்களும், கத்திக் குத்துக்காயங்களும்ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

70 லட்சத்திற்கும் கூடுதலான மக்கள் வாழும் கராச்சிப் பகுதியில் உள்ள சகல ஆஸ்பத்திரிகளிலும் அவசர காலநிலை பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் வானொலி உடனடியாக இரத்த தானம் செய்யும்படி மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துவருகின்றது.

இந்திய உபகண்டம் இரண்டாகப் பிரித்த போது இந்தியாவில் இருந்து பாகிஸ்தான் குடிபெயர்ந்த முகரஜ் என்ற முஸ்லிம்களுக்கும் ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியில் உள்ள பட்டாணியருக்குமிடையே இனக்கலவரங்கள் மூண்டது.

கலவரங்களில் ஈடுபடுவோரை பொது இடங்களில் கண்டவுடன் எவ்வித எச்சரிக்கையுமின்றி சுட்டுத்தள்ளுமாறு பாகிஸ்தான் இராணுவம் பணிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## அதிகாரிகள் லாகூரில் சந்திப்பர்

இஸ்லாமாபாத் டிச. 15

இந்தியா - பாகிஸ்தானிய அதிகாரிகள் அடுத்த வார இறுதியில் லாகூரில் சந்தித்து உரையாடுவார்கள்.

சீக்கிய தீவிரவாதிகள் பற்றியும் அவர்களுக்கு மறைமுகமாக பாகிஸ்தான் ஆதரவளித்து வருவதாகவும் இந்தியா தொடர்ந்தும் அறிவித்துவருவதாலேயே இந்தச் சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சு அறிவித்தது. (ஒ)

## அபிப்பிராய வாக்கெடுப்பு

அடிஸ்அபாபா டிச 15

எத்தியோப்பியாவில் புதிய அரசியல் யாப்பின் நகல்பற்றிய பொதுமக்களின் அபிப்பிராய வாக்கெடுப்புஒழுங்கு செய்யப்பட்டுள்ளது

அங்கு சோஸலிச புரட்சிக்கான நிரந்தர அமைப்புக்களை ஏற்படுத்தும் வகையில் புதிய அரசியல் யாப்புதயாரிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## உலகத் தமிழ் வங்கி

ஜிப்ரோல்டர், டிச 15

உலகத் தமிழ் சம்மேளனம் உலகத் தமிழ் வளர்ச்சி வங்கி ஒன்றை ஜிப்ரோல்டரில் அமைக்கவிருக்கின்றது.

இதற்கு 10 லட்சம் ஸ்ரேலிங் பவுண் முதலீடு செய்யப்படும்.

உலகெங்கிலும் தமிழ் வளர்ச்சிப் பணிகளுக்கும் தமிழ் மொழி கலாசார மேம்பாட்டிற்கும் இந்த வங்கியின் நிதி பயன்படுத்தப்படும்.

இவ்வாறு உலகத் தமிழ் சம்மேளனத் தலைவரும், மலேஷிய நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் டேவிட் தெரிவித்தார்.

நியூயோர்க், லண்டன், பாரீஸ், புதுடில்லி, சென்னை, சிங்கப்பூர், கோலாலம்பூர், போட் லூயிஸ் ஆகிய இடங்களில் இந்த வங்கிக் கிளைகள் நிறுவப்படும்.

உலகத் தமிழ் பல்கலைக்கழக மொன்றை தமிழ் நாட்டில் நிறுவவும் இந்த சம்மேளனம் திட்டமிட்டுள்ளது. (ஒ)

## உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு

கோலாலம்பூர், டிச. 15

உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு வரும் மே மாதம் 20 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை கோலாலம்பூரில் நடைபெறும்.

இந்த ஆறாவது மாநாட்டை மலேஷிய பிரதமர் ஆரம்பித்து வைப்பார்.

இந்த ஐந்து நாள் மாநாட்டில் உலகெங்கிலும் இருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டு ஆய்வுக் கட்டுரைகளை வழங்குவார்கள் (ஒ)

## செக்.விஜயம்

பீகிங், டிச. 15

சீனக்கம்யூனிஸ்ட் கட்சியின் பொது செயலாளர் கூ யாவோ பாங் விரைவில் செக்கோஸ்லாவாக்கியாவிற்கு விஜயம் செய்வார்.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடன் நல்லுறவுகளை விருத்தி செய்து கொள்ள சீனா காட்டும் அக்கறையை இந்த விஜயம் பிரதிபலிக்கும் என செக். ஜனாதிபதி தெரிவித்தார்.

சீன-ரஷ்ய பிரச்சினைகள் காரணமாக 1960 ஆம் ஆண்டில் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் தமது உறவுகளை சீனாவுடன் துண்டித்தன. (ஒ)

### விமானத்தடை

லூசாக்கா டிச 15

தென் ஆபிரிக்க விமானங்கள் தத்தமது பிரதேசங்களுக்கு மேலாக பறப்பதை தடைசெய்யுமாறு அங்கத்துவ நாடுகளை ஆபிரிக்க ஒருமைப்பாட்டுச் சங்கம் கோரியுள்ளது. (ஒ)

### வெளி உலகில்

## கிளர்ச்சியாளர்கள் ஆட்சியைப் பிடிப்பர் என்கிறார் மார்க்கோஸ்

வாஷிங்டன், டிச. 15

பிலிப்பீன்ஸில் இன்னும் ஏழு வார காலங்களுக்குள் கம்யூனிஸ்ட் கிளர்ச்சி வாதிகள் ஆட்சியைக்கைப்பற்றி விடுவார்கள்.

இவ்வாறு பிலிப்பீன்ஸ் முன்னாள் ஜனாதிபதி பேர்டினட் மார்க்கோஸ் அறிவித்தார்.

ஜனாதிபதி கொறசின் அக்கியூனோவின் அரசாங்கத்தைப் பாதுகாக்க அமெரிக்கத் துருப்புக்களை அங்கு அனுப்பி வைப்பது சந்தேகமாகும் ஆனால் அமெரிக்காவின் விமானப்படை கடற்படைத் தளங்களைப் பாதுகாக்க அவர்கள் நடவடிக்கை எடுக்கக் கூடும்.

திருமதி அக்கியூனோ உடனடியாகப் பதவி விலக கம்யூனிஸ்ட் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதையும் நிறுத்தவேண்டும். இராணுவமேஆட்சிப்பொறுப்பைக் கையேற்று கிளர்ச்சி வாதிகளை முற்றாக ஒழிக்கவேண்டும்.

இவ்வாறு 69 வயதான முன்னாள் ஜனாதிபதி மார்கோஸ் மேலும் தெரிவித்தார். (ஒ)

## தமிழர்கள் சுதந்திரமாக வாழ

# வடக்கு, கிழக்கு இணைந்த மாநில ஆட்சியே அவசியம்

### கிறிஸ்தவ தூதுக்குழுவினர் கருத்து

யாழ்ப்பாணம், டிச.16

தமிழர்கள் சுதந்திரமாக வாழுவதற்கு அவர்களுக்கு வடக்கும் கிழக்கும் இணைந்த மாநில ஆட்சியே வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு தேசிய கிறிஸ்தவ சங்கக் குழுவில் அங்கம் வகித்து வந்த அருட்திரு. ஆர். எபனேசர் அடிகளார் தெரிவித்தார்.

ஞாயிற்றுக்கிழமை சென்.ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் எல்லாத் திருச்சபைகளைச் சேர்ந்த அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர்.

யாழ் அத்தியாட்சியப் பேராயர் திரு. டி. ஜே. அம்பலவாணர் இக் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

அருட்திரு. எபனேசர் மேலும் கூறியதாவது:-

தமிழ்மக்கள் தொடர்ந்தும் தமது கலாச்சாரங்களைப் பேணி வளர்க்க வேண்டும்.

தென் பகுதியில் நடைபெறும் சமூக ஸ்தாபனக் கூட்டங்களில் நான் கலந்து கொள்ளும்போது கூட தமிழர் உரிமைபற்றித்தான் நான் வாதாடுவேன்

நான் ஒரு புரட்சிவாதி! தமிழருக்குத் தனியான ஒரு தாயகம் வேண்டும். அவர்களுக்கு வடக்கும் கிழக்கும் இணைந்த மாநிலமே வழங்க வேண்டும் என நான் அரசை வற்புறுத்துவேன்.

இப்படி அவர் சொன்னார்.

குருநாகல் அத்தியட்சாதீன பேராயர் அன்றா குமாரகே பேசுகையில்:-

நாம் இங்கு வந்து பார்த்த பொழுதுதான் தமிழ் மக்களுடைய கஷ்டநிலை புரிகிறது.

அவர்கள் கஷ்டங்களை நாம் உணருகிறோம்.

எனவே தென் இலங்கைக்கு நாம் சென்று எமது திருச்சபைகளுடன் கலந்துரையாடி இருசாரரும் சமாதானமாக வாழ முயற்சி எடுப்போம் என்றார்.

இலங்கா மெதடிஸ்த திருச்சபையின் அருட்திரு ஹரல் பெர்ணாண்டோ கிறிஸ்தவ மாணவர் சங்கப் பிரமுகர் திரு. லக்ஷ்மன் குணசேகர ஆகியோர் உட்பட பலர் அங்கு உரையாற்றினர். (உ-10)

## கழிவுப் பொருட்களைக் கொண்டு உபகரணங்கள்

பருத்தித்துறை, டிச. 16

யாழ் மாவட்டத்திலுள்ள கழிவுப் பொருள்களைக் கொண்டு விஞ்ஞான உபகரணங்கள் தயாரித்தலுக்கான விஞ்ஞான வதிவிட பாசறையொன்று நாளையும், நாளை மறுதினமும் யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

முதலில் யாழ் மாவட்டத்திலுள்ள விஞ்ஞானக் கல்வி ஆலோசகர்களுக்கு இவ்வதிவிட பாசறையினை வினைத்திறனுடன் நடத்துவதற்கு யாழ் கல்வித் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

கழிவுப் பொருள்களைக் கொண்டு விஞ்ஞான உபகரணங்களைத் தயாரிப்பதற்கு அடுத்த ஆண்டு முதலாந்தவணை ஆரம்பத்தில் யாழ் மாவட்டத்திலுள்ள தெரிவு செய்யப்பட்ட விஞ்ஞான ஆசிரியர்களுக்கான சேவைக் காலப் பயிற்சி வகுப்புக்கள் நடைபெறுமென யாழ் மாவட்ட விஞ்ஞானக் கல்வி அதிகாரி திரு. செ. செல்லத்துரை தெரிவித்துள்ளார். (உ-118)

### சீனாவில் நெஸ்லே

நெஸ்லே நிறுவனம் முதல் தடவையாக சீனாவில் பால் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை நிறுவவுள்ளது.

## கட்டைவேலியில் ரூ. 2 லட்சம் செலவில் நூலகம்

கரவெட்டி, டிச. 16

கட்டைவேலியில் சுமார் இரண்டு லட்சம் ரூபா செலவில் புதிய பொதுசன நூலகம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

கட்டைவேலி உப அலுவலகத்தின் கீழ் இவ் வேலைத் திட்டங்கள் செயற்பட்டு வருகின்றது.

இந்த நூலகம் அமைப்பதினால் கட்டைவேலி, கரவெட்டி, அல்வாய், மாலுசந்தி பகுதி மக்கள் பெரிதும் நன்மை அடைவர். (உ-70)

### அச்சுவேலியில் 16 சங்கங்கள்

அச்சுவேலி, டிச. 16

அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகளை உள்ளடக்கிய பகுதியில் இதுவரை 16 ஐக்கிய நாணய சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இந்தப் பகுதியில் மேலும் பல ஐக்கிய நாணயசங்கங்களை அமைத்து பதிவு செய்யும் முயற்சியில் அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கல்வி உத்தியோகத்தர் திரு. சி. நடராசா ஈடுபட்டுள்ளார். (உ-11)

### பொய்யாமொழி



**குறள்:**

நாளென ஒன்று போல் காட்டி உயிர் ஈரும்
வாளது உணர்வார்ப் பெறின்.

**பொருள்:**

வாழ்க்கையை ஆராய்ந்து உணர்வாரைப் பெற்றால், நாள் என்பது ஒருகால அளவு போல் காட்டி, உயிரை உடம்பிலிருந்து பிரித்து அறுக்கும் வாளாக உள்ளது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### வாசகர் திருமுகம்

## வீதியின் அவலநிலை

எமது ஊரில் உள்ள ஒரு வீதியின் அவல நிலை பற்றி உதயன் ஊடாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

உடுவில் டச் வீதியுடன் துல்மினியா தோட்ட ஒழுங்கை (சங்குவேலி வடக்கில்) இணையும் இடத்திக்கு அருகில் இவ்வீதி மிகவும் பள்ளமாகக் காணப்படுகிறது.

வெள்ளநீர் தேங்கி நின்று பாதசாரிகளுக்கும், வாகனப் போக்குவரத்துக்கும் மிகவும் சிரமத்தைக் கொடுக்கின்றது.

இவ்விடத்தில் வெள்ள நீரானது வீதியின் முழு அகலத்திலும் தேங்கி நின்று ஒரு சிறுகுளம் போலக் காட்சி அளிக்கின்றது. சிறிய மழைக்கும் இவ்விடத்தில் நீர் தேங்கி விடுகின்றது.

வடிகால் அமைப்புச் சீராக இல்லாததாலும் இந்த இடம் மிகவும் பள்ளமாக இருப்பதாலுமே இந்த நிலை நிலவுகின்றது.

இது விடயத்தில் உடுவில் உபஅலுவலகம் உரிய நடவடிக்கையை விரைவில் எடுத்து, இதனை நிவர்த்திக்கும் என வீதிப் பாவனையாளர்கள் எதிர் பார்க்கின்றார்கள்.

ப. மகேந்திரதாசன்
சங்குவேலி வடக்கு

## வைத்தீஸ்வராவில் 6ஆம் 7ஆம் ஆண்டு பிரவேசப் பரீட்சை

யாழ்ப்பாணம், டிச. 16

1987 ஆம் ஆண்டில் வைத்தீஸ்வரா வித்தியாலத்தில் ஆண்டு ஏழு வகுப்பிற் சேரவிரும்பும் மாணவர்களுக்கான பிரவேசப் பரீட்சை இம் மாதம் 20 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளதாக அதிபர் அறிவிக்கின்றார்.

விண்ணப்பங்கள் பதினேழாம் திகதி நாளை புதன்கிழமை வரை ஏற்றுக் கொள்ளப்படும். இப்பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெறும் மூன்று மாணவர்களுக்குப் புலமைப் பரிசில் வழங்குவதற்கு வித்தியாலயப் பழைய மாணவர் சங்கம் முன்வந்துள்ளது. ஏழாம் ஆண்டிலிருந்து க. பொ. த. ப. (சாதாரண தரம்) வகுப்புவரை ஒவ்வோராண்டும் ஐந்நூறு ரூபா வழங்கப்படும்.

இதே வேளை ஆறும் ஆண்டிற்கான ஐந்தாம் தரம் பிரவேசப்பரீட்சை இம்மாதம் 27 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறுகின்றது. 22 ஆம் திகதி வரை அதற்குரிய விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

அடுத்த ஆண்டிற் புதிதாகத் தொடங்கப்படவுள்ள இவ்வகுப்பில் நாற்பது மாணவர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படுவர். பிரவேசப் பரீட்சையிற் சித்தியடையாத எவரும் அடுத்த ஆண்டில் வைத்தீஸ்வரா வித்தியாலயத்திற் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார் எனவும் அதிபர் தெரிவித்தார் (அ)

### ஆருத்திரா தரிசனம்

யாழ்ப்பாணம், டிச. 16

திருவெம்பாவையையொட்டி சைவ ஆலயங்களில் அதிகாலையில் பூஜையும் அபிஷேக ஆராதனையும் நடைபெற்று வருகின்றன.

ஈழத்துச் சிதம்பரமான காரைநகர்ச் சிவன் கோயிலில் இன்று ரதோற்சவமும் நாளை அதிகாலை ஆருத்திரா தரிசனமும் தீர்த்த உற்சவமும் நடைபெறுகின்றன. (இ)

ரெமிங்ரன்
மூளாய்
O/L 87 - விஞ்ஞானம்
ஆசிரியர்: J. R. சூரி
நேர அட்டவணை: புதன், சனி, ஞாயிறு மாலை 4.45 மணி.

# உதயன்

16 । 12 । 1986 செவ்வாய்க்கிழமை

சயன்ஸ் சென்ரர்
புகையிரத நிலைய வீதி, தெல்லிப்பழை.
O/L 87—விஞ்ஞானம்
ஆசிரியர்: J. R. சூரி
நேர அட்டவணை: ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9.00 மணி

# மனித உரிமைகள் ஆணைக்குழு

# சர்வதேச மன்னிப்புச் சபை எமது

# நடவடிக்கையை பரிகசிக்கின்றன

## சேபால ஆட்டிகல சுற்று நிருபம்

கொழும்பு, டிச. 16
மனித உரிமை ஆணைக்குழு, சர்வதேச மன்னிப்புச் சபை ஆகியன எமது நடவடிக்கைகளைப் பரிகசித்து வருகின்றன.

ஆகவே தீவிரவாதச் சந்தேக நபர்களைக் கைது செய்து விசாரணை நடத்தும் விஷயத்தில் நாம் ஈழம் பிரிவினை வாதிகளுக்கு இடம் கொடாத விதத்தில் நடப்பது அத்தியாவசியமாகிறது.

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சேபால ஆட்டிகல, பொலீஸ் மா அதிபருக்கு அனுப்பிய சுற்று நிருபம் ஒன்றில் முன்கண்டவாறு வலியுறுத்தி உள்ளார்.

விதிக்கப்பட்ட நடைமுறைக்கு இணங்க தீவிரவாத சந்தேக நபர்களைக் கைது செய்வது, விசாரணை செய்வது முதலியவற்றில் ஈடுபடுவதன் மூலம் நாட்டின் பேரைக் கெடுப்பவர்களுக்கு சிறிதும் இடம் கொடுக்கக் கூடாது என்று பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் ஆட்டிகலை சுற்று நிருபத்தில் வலியுறுத்தி இருக்கின்றார்.

இவற்றை இணைப்பு அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவரும்படியும் பொலீஸ் மா அதிபரை, பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் சுற்றுநிருபம் மூலம் கேட்டுள்ளார்.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும் சந்தேக நபர்கள் பற்றிய விவரங்கள் உடனே இரகசியப் பொலீஸ் திணைக்கள இயக்குநருக்கு அறிவிக்கப்பட வேண்டும். அப்போது தான் தேசிய பாதுகாப்பு அமைச்சர் தடுப்புக் காவல் உத்தரவை வழங்கக்கூடியதாக இருக்கும்.

சந்தேக நபர்களுக்கு எதிரான விசாரணை முடிந்தபின்னர், குற்றப் பத்திரிகைகள் தாக்கல் செய்யக்கூடிய அளவு சாட்சியங்கள் இல்லை என்று சட்டமா அதிபர் கருதும் சந்தேக நபர்கள் பலவத்தை புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

இயலுமான வரை தீவிரவாத நடவடிக்கையுடன் தொடர்புடைய சகல சந்தேக நபர்களும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தான் தடுத்து வைக்கப்பட வேண்டும்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சில சிக்கல்கள் காரணமாகத்தான் இடைக்கால நடவடிக்கையாக சந்தேக நபர் அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் கைது செய்யப்படுகிறார்.

அதன் பின்னரே பாதுகாப்பு அமைச்சரின் தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்படுகிறார்.

பயங்கரவாதத்தடைச் சட்டம் விசேடமான ஒரு சட்டம். சில அடிப்படை மனிதஉரிமைகளைப் பாதுகாக்கும் உத்தரவாதங்களும் இச் சட்ட மூலத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

ஆகவே தான் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்படும் தீவிரவாதச் சந்தேக நபர்களைச் சில சமயம் அவசரகாலச் சட்ட விதிகளின் கீழும் தடுத்து வைக்கப்பட வேண்டியது அவசியமாகின்றது.

இப்படியான சந்தர்ப்பங்களில் அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் தடுத்து வைக்கப்பட வேண்டியவர்கள் பற்றி பொலீஸ் மா அதிபர் சிபார்சு செய்ய வேண்டி ஏற்படும்.

இது குறித்து இணைப்பு அதிகாரிகளுக்கு நான் முன்னரும் கூறியிருந்தேன்.

அப்படியான சந்தேக நபர்களை அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் தடுத்து வைப்பதற்காகத் தான் தடுப்புக்காவல் உத்தரவை வழங்கும் அதிகாரம் தற்சமயம் உதவிப் பொலீஸ் அதிபர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

இச் சிறிய நடைமுறையைக் கையாள்வதில் இணைப்பு அதிகாரிகள் தவறிவிட்டு பின்னர் மன்னிப்புக் கோர முடியாது.

இப்படி பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் ஆட்டிகல தனது சுற்றுநிருபத்தில் கூறியிருக்கிறார். (இ—எ)

## அந்தச் சிறுமி யாரோ?

யாழ்ப்பாணம், டிச. 16
யாழ்நகரில் அநாதரவாகக்காணப்பட்ட சிறுமி ஒருத்தியை யாழ் வகுப்புத் தொழிலாளர் சங்கம் நேற்று முழுவதும் பராமரித்தது.

சிவப்புச் சட்டையுடன் பவுண் தோடும் அணிந்துள்ள இச் சிறுமிக்கு சுமார் ஐந்து வயது இருக்கலாம் என மதிக்கப்படுகின்றது.

இச் சிறுமியைப் பற்றிய மேலதிக விபரங்கள் எதுவும் தெரியவில்லை.

சிறுமியைத் தவிக்கவிட்டவர்களோ அல்லது சிறுமியை இழந்து தவிப்பவர்களோ 76, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணத்தில் உள்ள வகுப்புத் தொழிலாளர் சங்கத்தில் திரு. செ. தியாகராஜாவுடன் தொடர்பு கொள்ளும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ஒ)

## அநாதரவான சடலம்

யாழ்ப்பாணம், டிச. 16
75 வயது வயோதிபர் எஸ். செல்லத்துரையின் சடலம் அநாதரவான நிலையில் யாழ் ஆஸ்பத்திரி பிரேத அறையில் கிடக்கின்றது.

இம் மாதம் முதலாம் திகதி இவர் ஏற்புவலி காரணமாக ஆஸ்பத்திரியில் 20 ஆவது வார்டில் அனுமதிக்கப்பட்டார்.

இம்மாதம்13 ஆம்திகதி மரணமானார்.

சண்டிலிப்பாயைச் சேர்ந்த எஸ் சுந்தரம் என்பவர் இவரை ஆஸ்பத்திரியில் அனுமதித்திருந்தார்.

(இ-எ)

## கல்முனைக் கொலைகள்

# சுதந்திரமான விசாரணை நடத்தமன்சூர் கோருகிறார்

அம்பாறை, டிச. 16
கடந்த சனிக்கிழமை கல்முனை நகரில் நடந்த அசம்பாவிதங்கள் குறித்து சுதந்திரமான விசாரணை ஒன்றை நடத்தி உரியவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இப்படி கல்முனை எம். பி. யும் முல்லைத்தீவு மாவட்ட அமைச்சருமான ஜனாப். ஏ. ஆர். மன்சூர் ஜனாதிபதிக்கு அனுப்பிய தந்தி ஒன்றில் கோரி இருக்கிறார்.

கல்முனைச் சம்பவங்களில் பொலீஸார் நடந்து கொண்ட விதம் பற்றிய விவரங்களை ஜனாப் மன்சூர் ஜனாதிபதியிடம் நேரில் சமர்ப்பிக்க இருக்கிறார்.

இச்சம்பவங்கள் சம்பந்தமாக எடுக்கப்பட்ட வீடியோ படமும் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட இருப்பதாகவும் தெரியவந்துள்ளது. கல்முனை அசம்பாவிதத்தில் ஈடுபட்ட படையினர் தண்டிக்கப்பட வேண்டும் என்று இஸ்லாமிய இளைஞர் பேரவையின் கல்முனைத் தொகுதி ஒன்றியமும் ஜனாதிபதியைக் கேட்டுள்ளது.

(அ—எ—14)

## ரூ 8 ஆயிரம் கொள்ளை

மட்டக்களப்பு, டிச.16
மட்டக்களப்பு இ. போ. சவில் கடந்தசனிக்கிழமை நடந்த சம்பவம் ஒன்றில் சுமார் 8,000 ரூபா கொள்ளையிடப்பட்டது.

ஆயுதந் தரித்த இரண்டு இளைஞர்களே இக் கொள்ளையை நடத்தினர் என்று கூறப்படுகிறது.

(இ—எ—21)

# நீசச் சக்திகளின் சதித்திட்டம் என்கிறது முஸ்லிம் காங்கிரஸ்

அம்பாறை, டிச. 16
கல்முனையில் முஸ்லிம்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் இனப்பிரச்சினைத் தீர்வில் முஸ்லிம் இனத்தைப் பலிக்கடா ஆக்கும் நீசச்சக்திகளின் சதித்திட்டங்களில் ஒன்று.

இப்படி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கல்முனைச் சம்பவங்கள் அதிர்ச்சி தருவனவாக அமைந்துள்ளன என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

முஸ்லிம் இளைஞர்கள் இக்கட்டத்தில் நிதானமாக, பொறுமையுடன் செயல்படவேண்டும். விழிப்புணர்ச்சியுடன் செயல்பட்டால் தான் முஸ்லிம்களின் நலன்களை நாம் பேணிப் பாதுகாக்க முடியும்.

இப்படி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது (எ-14)

## கிழக்கே போக விஜே இணக்கம்

அம்பாறை, டிச. 16
கிழக்கு மாகாணத்துக்கு விரைவில் விஜயம் செய்ய ஸ்ரீலங்கா மக்கள் கட்சிச் செயலாளர் விஜய குமாரணதுங்க ஒப்புக்கொண்டிருக்கிறார்.

கூட்டணிப் பிரமுகரும் அம்பாறை மாவட்ட அபிவிருத்திச் சபையின் முன்னாள் உறுப்பினர் திரு. கா. வேல்முருகு நேற்று திரு. விஜய குமாரணதுங்காவுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட போது, திரு. குமாரணதுங்கா கிழக்குக்கு விஜயம் செய்யத் தமது சம்மதத்தைத் தெரிவித்தார்.

திரு வேல்முருகு கொழும்பு சென்று, விஜேயின் கிழக்குமாகாண விஜயத்துக்கான திகதியை நிர்ணயிப்பார் என்று தெரியவருகிறது.

(அ—எ—16)

# கல்முனையில் இன்று பூரண ஹர்த்தால்

அம்பாறை. டிச. 16
இன்று செவ்வாய்க்கிழமை கல்முனை நகரில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுகிறது.

கல்முனை நகரில் கடந்த சனிக்கிழமை ஆயுத படையினரால் முஸ்லிம்கள் சுட்டுக் கொல்லப்பட்டது, சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை ஆகியவற்றிற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஹர்த்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இஸ்லாமிய இளைஞர் இயக்கப் பேரவையின் கல்முனைத் தொகுதி ஒறின்யம் இந்த ஹர்த்தாலை ஒழுங்கு செய்துள்ளது.

தனியார், மற்றும் பஸ் போக்குவரத்துக்கள் இன்று நடைபெறு வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருக்கும். (அ—எ—14)

# ஊர்காவற்றுறை கடலில் துப்பாக்கிச் சூடு

## முஸ்லிம் மீனவர் படுகாயம்

ஊர்காவற்றுறை. டிச 16
ஊர்காவற்றுறை கடற்கரையோரமாக மீன் பிடித்துக்கொண்டிருந்த மீனவர் ஒருவர் கடற்படையினரின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்தார்.

காரைநகர் கடற்கரை முகாமிலிருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால் குடல் வெளியே வந்தநிலையில் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு இவர் கொண்டு செல்லப்பட்டார்.

இதுபற்றிக் கூறப்படுவதாவது:.

நேற்றுக் காலை 9-00 மணியளவில் முகமட் இஸ்மாயில் என்னும் இந்த மீனவர் ஊர்காவற்றுறையில் கடற்கரையோரமாக வலை வீசி மீன்பிடித்துக் கொண்டிருந்தார்.

இவர்மீது கடற்படை முகாமிலிருந்து துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டது.

படுகாயமடைந்து கடலில் விழுந்த முகமட் இஸ்மாயிலை விடுதலைப் புலிகள் தூக்கிவந்தனர். யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு இவர் உடனடியாகக் கொண்டு வரப்பட்டார்.

படுகாயமடைந்த மீனவரான இஸ்மாயிலுக்கு 60 வயது. புத்தளத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் சில வருடங்களுக்கு முன்னர் இங்கு வந்து குடியேறி மீன்பிடித் தொழில் செய்துவருகிறார். இவரது மனைவி அராபிய நாடொன்றில் பணிப் பெண்ணாகக் கடமையாற்றுகிறார் இவர் நான்கு பிள்ளைகளின் தந்தை. (இ—16)

## திருமலை.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
திருகோணமலை மாவட்டம் இல்லாத எந்தத் தீர்வையும் ஏற்க முடியாது என்று கூட்டணி அரசியல் குழு எடுத்த முடிவும் இந்தியக் குழுவிடம் தெரிவிக்கப் பட்டது.

திருகோணமலையை சிங்களப் பிரதேசமாக்க இலங்கை அரசு முன்னர் நடைமுறைப்படுத்திய சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் பற்றிய விவரங்களையும் கூட்டணித் தூதுக்குழு இந்தியக்குழுவிடம் விவரமாகத் தெரிவித்தது. (அ—எ)

# லொறி உரிமையாளர் பாதை திருத்துவர்

யாழ்ப்பாணம், டிச. 16
லொறி உரிமையாளர்கள் சேர்ந்து கிளிநொச்சிக்குப் போகும் பூங்காவனப் பாதையைத் திருத்த உள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை கூடிய செயற்குழுக் கூட்டத்தில் தூர சேவைப் போக்குவரத்தில் ஈடுபடும் சகல லொறி பஸ் உரிமையாளர்களும் வீதி திருத்துவதற்கு வாகனம் ஒன்றிற்கு ஆயிரம் ரூபா விதம் செலுத்த வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

மேற்குறிப்பிட்ட தீர்மானம் நேற்று திங்கட்கிழமை கூடிய பொதுக் கூட்டத்தில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பணத்தை 15 ஆம் திகதியில் இருந்து 31ஆம் திகதிக்குள் தூரசேவைப் போக்குவரத்தில் ஈடுபடும் லொறி, பஸ் உரிமையாளர்கள், பிரயாணம் செய்யும் வழியில் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் இடத்திலுள்ள சங்கத்தின் பிரதிநிதியிடம் கையளிக்கும்படி கோரப்பட்டுள்ளனர்.

பாதை திருத்துவது சம்பந்தமான முழுப் பொறுப்பையும் சங்கமே ஏற்றுக்கொண்டுள்ளது.

(இ)

## விறகு ஆகாய விலை---

(1ம் பக்கத் தொடர்ச்சி)
துச்செலவை அரச மரக் கூட்டுத்தாபனம் அதிகரித்துள்ளதைத் தொடர்ந்தே, பாவனையாளர்கள் கூடுதல்விலை கொடுத்து விறகு வாங்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு இன்று தொடக்கம் ஆளாக வேண்டியுள்ளது.

இதுவரை ஒருமெட்றிக் தொன் விறகை ஏற்றி வர லொறிக் கட்டணமாக 250 ரூபா அரச மரக் கூட்டுத்தாபனத்தினால் கொடுக்கப்பட்டுவந்தது.

'இந்தக் கட்டணத்துக்கு விறகு ஏற்றிவர முடியாது போக்குவரத்துச் செலவுகள் அதிகரித்துள்ளன—' என்று லொறி உரிமையாளர் குழு ஒன்று கொழும்பு சென்று அரச மரக் கூட்டுத்தாபனத் தலைவரிடம் முறையிட்டது.

அதைத் தொடர்ந்து ஒரு மெட்ரிக் தொன் விறகு ஏற்றிவரும் கட்டணத்தை 375 ரூபா ஆக கூட்டுத் தாபனம் அதிகரித்துள்ளது.

அதிகரிக்கப்பட்ட போக்குவரத்துக் கட்டணத்தைக் கூட்டுத்தாபனம், பாவனையாளர் தலையில் சுமத்திவிட்டது

(இ—எ)

## வடக்கு---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
ராம்.

சிப்பாய்களின் ரோந்துப் பவனியை அடுத்து கொழும்பு, வவுனியா பஸ்கள் நேற்றிரவு மிகவும் பிந்தியே யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

இதேவேளை சிப்பாய்கள் நடை பவனி புளியங்குளத்தையும் தாண்டி கிளிநொச்சியை அண்மித்துவிட்டதாக கடைசியாக கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. (இ—10)

## தமிழ் பட்ட---

(3-ம்பக்கத் தொடர்ச்சி)
அம்பாறை-8, யாழ்ப்பாணம்-57, கொழும்பு-3, கண்டி-6, நுவரெலியா-1 என்ற எண்ணிக்கையில் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன,

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் தலா 4 கண்டி மன்னார் மாவட்டங்களில் தலா 2 முஸ்லிம்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்,

(உ—21)

## லலித்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)
யிட்டார்.

அமெரிக்காவில் தான் சென்ற இடங்களில் தமிழர் ஆர்ப்பாட்டம் எதுவும் நடக்கவில்லை என்று அமைச்சர் அந்த அறிக்கையில் தெரிவித்தார்.

நியூயோர்க்கில் நடந்த சர்வதேச மன்னிப்புச் சபைப் பிரதிநிதிகள் இரண்டு பேர் கலந்து கொண்ட கருத்தரங்கில் இலங்கைநிலையை தெளிவுபடச் சொன்னேன். இப்படி அமைச்சர் அறிக்கையில்குறிப்பிட்டார்.

(இ—எ)

## டிக்ஸிற் ஜனாதிபதியை சந்தித்தார்

கொழும்பு, டிச. 16
இந்தியத்தூதர் திரு. டிக்ஸிற் கடந்த ஞாயிறு கொழும்பு திரும்பினார்.

நேற்று பிற்பகல் திரு. டிக்ஸிற் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைச் சந்தித்துப் பேசினார். (இ—எ)

# சிப்பாய்களின் நடைபவனியால் பஸ்கள் தாமதம்

## ரயிலும் பிந்தியே புறப்பட்டது

யாழ்ப்பாணம், டிச. 16
வவுனியாவில் இருந்து நேற்று 'யாழ்தேவி' தாமதமாகவே புறப்பட்டது. சிப்பாய்களின் நடைபவனியே அதற்குக் காரணமாகும். பஸ் சேவைகளும் தாமதமாகின.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

நேற்றுக் காலை 9மணி அளவில் நூற்றுக்கணக்கான சிப்பாய்கள் வவுனியா இராணுவ முகாமில் இருந்து மாங்குளம் நோக்கி நடைபவனியாக வந்தனர்.

இந்த ரோந்து நடவடிக்கையின் போது யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியூர்கள் சென்ற அனைத்து வாகனங்களும் சிப்பாய்களினால் வழிமறிக்கப்பட்டுச் சோதனையிடப்பட்டன.

இதன் காரணமாக யாழ்தேவி இணைப்பு பஸ்களும் தாமதமாகின.

இதனை அறிந்த, வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுச் செயலாளர் டாக்டர் ச. எஸ். பரராஜசிங்கம் வவுனியா பிரிகேடியருடன் தொடர்பு கொண்டு நிலைமையைத் தெரிவித்தார்.

உடனடியாக ரயில்வேத் திணைக்களத்துடனும், ரயில் நிலையத்துடனும் தொடர்பு கொண்ட பிரிகேடியர் கொப்பேக்கடுவ யாழ்தேவியை சற்று தாமதப் படுத்துமாறு உத்தரவிட்டார்.

இதனை அடுத்து இணைப்பு பஸ்கள் வரும் வரை யாழ்தேவி வவுனியாவில் தரித்து நின்றது.

இணைப்புபஸ்கள் வந்ததும் யாழ்தேவி பயணத்தைத் தொடர்ந்தது.

45 நிமிடம் தாமதித்து யாழ்தேவி வவுனியா ரயில்நிலையத்தில் இருந்து தாமதமாகச் சென்றது. (இ—10)

# காங்கேசனில் சிப்பாய்கள் நேற்று நடைபவனி சென்றனர்

காங்கேசன்துறை டிச 16
காங்கேசன்துறை முகாமில் இருந்துபலாலி முகாமுக்கு நடந்து சென்ற இராணுவத்தினருடன் 25க்கு மேற்பட்டலொறிகளில் டயர்கள், முட்கம்பிகள், சாக்குகள் ஆகியனவும் கொண்டு செல்லப்பட்டன.

பாரந்தூக்கி இயந்திரம் ஒன்றும் கொண்டு போகப்பட்டது.

நேற்று பிற்பகல் 3மணியளவில் இந்த நடைபவனி இடம் பெற்றது. சுமார் 250 சிப்பாய்கள் வரையில்நடை பவனியில் சென்றனர்.

(அ—எ—68)

## வனபரிபாலன அலுவலகம் சேதம்

மட்டக்களப்பு,டிச. 16
ஏறாவூர் கோப்பாய் வெளியில் உள்ள அரச வனபரிபாலன அலுவலகக் கட்டடம் இனந்தெரியாதவர்களினால் கடந்த சனிக்கிழமை உடைத்துச் சேதமாக்கப்பட்டது.

சுமார் ஒன்றரை லட்சம் ரூபா சேதமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ—எ—21)

## பெப்ரவரியில் பொதுத் தேர்தல்?

### கொழும்பில் ஊகம்

கொழும்பு, டிச. 16
அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்த அரசு முன்வரலாம்.

கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரவலாக இப்பேச்சடிபடுகின்றது.

அப்படி நடத்தப்படின் வடக்கு, கிழக்கு மகாணங்கள் தவிர்ந்த ஏனைய பகுதிகளிலேதான் இத் தேர்தல் நடத்தப்படுமாம்.

இப்படி ஒரு தேர்தலை நடத்துவதன் மூலம் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஆளும் கட்சிக்குள் முட்டுக்கட்டையாக இருக்கும் எதிர்ப்புச் சக்திகளை அகற்றி விடலாம் என்றும் அதே நேரத்தில் சுதந்திரக் கட்சியின் பொதுத் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்ற கோரிக்கையைப் பூர்த்தி செய்ததாக இருக்கும் என்றும் அரசு உயர் வட்டாரங்கள் கருதுவதாக கொழும்பு வட்டாரங்களில் பேச்சடிபடுகிறது.

(இ—எ)

## இயக்கங்கள் ஒன்றுபட---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
மான இந்த ஊர்வலம் கடற்கரை வீதி, மூன்றும் குறுக்குத் தெரு, பிரதான வீதி, பாஷையூர், பாண்டியன்குளம், கச்சேரி ஆகியவற்றின் ஊடாகச் சென்று மீண்டும் சேமக்காலைச் சந்தியை வந்தடைந்தது.

நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

"போராளிகளே இயக்க மோதல்களைத் தவிருங்கள்."

"ஐக்கியத்தைப் பேணுங்கள்"

"அரசுக்கு எதிரான போராட்டமா? இயக்கங்களுக்கு எதிரான போராட்டமா?"

இப்படியான சுலோக அட்டைகள் ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப் பட்டன. (இ—10)

## கண்ணி---

(1-ம்பக்கத் தொடர்ச்சி)
டெடுத்தனர்.

சிப்பாய்களின் ரோந்தின்போது கண்ணிவெடி ஒன்று வெடித்ததாகவும் இதனால் சேதம் ஏதும் ஏற்படவில்லை எனவும் தெரியவருகிறது.

கண்ணிவெடிகளை மீட்டெடுத்த சிப்பாய்கள் ஆகாயத்தை நோக்கிப் பரவலாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். (இ—10)

## எண்ணெய் விலை உறுதிக்குத் தடை

வியன்னா, டிச. 15
'ஒபெக்' நாடுகளுக்கிடையே மீண்டும் தீவிரமடைந்துள்ள அரசியல் ரீதியிலான போட்டி மசகு எண்ணெயின் விலையை உறுதிப்படுத்துவதற்குத் தடையாக அமைந்துள்ளது.

இவ்வாறு வியன்னா இருந்து வெளியாகும் அறிக்கைகள் தெரிவித்தன.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்டு திகதி: 16 - 12 - 1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane, Power-House Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office. Sri Lanka Under Number QJ 60: N 86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org